# ‘திராவிட மாடல்’ தித்திக்கும் திட்டங்கள்!



கலைஞரின் புதல்வரால் விளைந்த தமிழ்ப்புதல்வன் திட்டம்.
மக்கள் முதல்வரால் துளிர்ந்த புதுமைப்பெண் திட்டம்.
மங்கையருக்குச் சம உரிமை கண்ட கலைஞரின்
கனவு நிலைக்க மகளிர் உரிமைத் தொகைத் திட்டம்

பெண்கள் தம் பயணத்திற்குப் பயனுள்ள
கட்டணம் இல்லா பேருந்து திட்டம்
சிறுவர் தம் சிறப்பிற்கு முதல்வரின் காலைச்சிற்றுண்டித் திட்டம்
மாணவர் தம் மேம்பாட்டிற்கு நான் முதல்வன் திட்டம்

பாரதத்திற்கே தமிழகத் திட்டங்கள் ஒரு முன்னோடி
மக்களின் இதயமே இதைப் பறைசாற்றும் கண்ணாடி
எதிர்கால உதயத்திற்கு இத்திட்டங்கள் ஒரு முன்னோட்டம்
அனைவருக்கும் அனைத்தும் என்பதே திராவிட மாடல் கண்ட சமத்துவத் தோட்டம்.

ஒய்வில்லாது உழைத்தவரின் ஒப்பற்ற திருமகனே
தமிழக மக்களின் நலத்திற்கு உழைத்திடும் தமிழ் மகனே
இது சொன்னதை செய்யும், செய்வதை சொல்லும் நல்லாட்சி
இதற்கு நாடாளுமன்றத்தின் நாற்பதுக்கு நாற்பதே சாட்சி.

**- மருத்துவர் கமல் காந்தன் சவுதி அரேபியா.**
**(தியாகி திரு. லட்சுமி காந்தன் பாரதி IAS [ஓய்வு] அவர்களின் பேரன்).**

### மாவட்ட ஆட்சியர் பா.பிரியங்கா பங்கஜம் தலைமை!

# திருவையாற்றிலிருந்து சொரக்குடிபட்டிக்குப் புதிய பேருந்து!

### ச.முரசொலி எம்.பி.- துரை. சந்திரசேகரன் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தனர்!

தஞ்சை, ஆக.14-

தஞ்சாவூர் மாவட்டம் திருவையாறு கிளையிலிருந்து சொரக்குடிபட்டியிலிருந்து இயக்கப்படுகிற நகர தட எண் A88 பேருந்தினை காலை மற்றும் மாலை நேரங்களில் வெண்டையம்பட்டி வழியாக வடுகன்புதுப்பட்டி வரை தட நீடிப்பு செய்து பொதுமக்களின் நீண்ட நாள் கோரிக்கை ஏற்று, பேருந்து இயக்கத்தினை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி. பா.பிரியங்கா பங்கஜம், தலைமையில் தஞ்சாவூர் நாடாளுமன்ற உறுப்பினர் ச.முரசொலி. திருவையாறு சட்டமன்ற உறுப்பினர் துரை.சந்திரசேகரன் முன்னிலையில் 09.08.2024 அன்று கொடியசைத்து துவக்கி வைத்தார்கள்.

முதன்முறையாக பேருந்து வசதி கிடைத்ததற்காக மாணவர்கள், பொதுமக்கள் பெரிதும் மகிழ்ந்தனர். வடுகன்புதுப்பட்டியில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் முதன்முறையாக பேருந்து இயக்கத்தினை வரவேற்று மாணவர்கள் பொதுமக்கள் மிகவும் மகிழ்ச்சியும் கோரிக்கையினை ஏற்று உடனடி நடவடிக்கை மேற்கொண்ட மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கு நன்றி தெரிவித்தனர்.

பேருந்து இயக்கத்தின் போது மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.பா.பிரியங்கா பங்கஜம், நாடாளுமன்ற உறுப்பினர் ச.முரசொலி திருவையாறு சட்டமன்ற உறுப்பினர் துரை.சந்திரசேகரன் ஆகியோர் மாணவர்களுடன் பேருந்தில் அமர்ந்து பயணம் செய்தனர்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.பா.பிரியங்கா பங்கஜம், தெரிவித்ததாவது.

தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் 05.08.2024 அன்று நடைபெற்ற பொதுமக்கள் குறை தீர்க்கும் கூட்டத்தின் மூலம் வடுகம்புதுப்பட்டி பள்ளி மாணவ மாணவியர்கள், பொதுமக்கள் 2 கிலோமீட்டர் காட்டுப்பாதையில் நடந்த சென்று வெண்டயம்பட்டி சாலையில் சென்று பேருந்தில் பயணிக்கும் நிலை இருக்கிறது எனவும் பேருந்து வசதி வேண்டியும் விண்ணப்பித்திருந்தனர். இம்மனு மீது உடனடி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வடுகன்புதுப்பட்டி பகுதியைச் சேர்ந்த பள்ளி மாணவர்கள் பொதுமக்கள் ஆகியோர் பயன்பெறும் வகையில் திருவையாறு கிளை மூலம் இயக்கப்படும் தடம் எண்.A88 என்ற பேருந்து காலை மற்றும் மாலை நேரங்களில் சொரக்குடியில் நடை எடுத்து வெண்டயம்பட்டி வழியாக திருக்காட்டுப்பள்ளி வரை இயங்கக்கூடிய நடையினை வடுகன்புதுப்பட்டி வரை காலை 2 நடைகளும், மாலை திருக்காட்டுப்பள்ளியில் நடை எடுத்து சொரக்குடி செல்லும் 2 நடையினை வடகன்புதுப்பட்டி வரை என 4 நடைகள் (4 X2=8) கிலோமீட்டர் நீட்டித்து இயக்கிடவும் தமிழ்நாடு அரசுப் போக்குவரத்து கழகம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்கள் என மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.பா.பிரியங்கா பங்கஜம் தெரிவித்தார்கள்.

இந்நிகழ்ச்சியில் வருவாய் கோட்டாட்சியர் திருமதி.இலக்கியா, மாவட்ட ஊராட்சி தலைவர் திருமதி. உஷா புண்ணியமூர்த்தி, ஒன்றிய குழு தலைவர் செல்லக்கண்ணு (எ) அரங்கநாதன், ஊரக வளர்ச்சி முகமை செயற்பொறியாளர் செல்வராஜ், தமிழ்நாடு அரசுப் போக்குவரத்து கழக கோட்ட மேலாளர் தமிழ்ச்செல்வன் ராயமுண்டான்பட்டி ஊராட்சி தலைவர் திருமதி.கனிமொழி சிவகுமார் மற்றும் ஏராளமான பொதுமக்கள், மாணவ மாணவியர்கள் கலந்து கொண்டனர்.



தஞ்சாவூர் மாவட்டம் திருவையாறு கிளையிலிருந்து சொரக்குடிபட்டியிலிருந்து இயக்கப்படுகிற நகர தட எண் A88 பேருந்தினை காலை மற்றும் மாலை நேரங்களில் வெண்டையம்பட்டி வழியாக வடுகன்புதுப்பட்டி வரை தட நீட்டிப்பு செய்து பொதுமக்களின் நீண்ட நாள் கோரிக்கை ஏற்று, பேருந்து இயக்கத்தினை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.பா.பிரியங்கா பங்கஜம், தலைமையில் தஞ்சாவூர் நாடாளுமன்ற உறுப்பினர் ச.முரசொலி, திருவையாறு சட்டமன்ற உறுப்பினர்துரை.சந்திரசேகரன் முன்னிலையில் 09.08.2024 அன்று கொடியசைத்து துவக்கி வைத்து பேருந்தில் பயணம் செய்தார்கள். அருகில் வருவாய் கோட்டாட்சியர் திருமதி.இலக்கியா, மாவட்ட ஊராட்சி தலைவர் திருமதி.உஷா, புண்ணியமூர்த்தி, ஒன்றிய குழு தலைவர் செல்லக்கண்ணு (எ) அரங்கநாதன், ஊரக வளர்ச்சி முகமை செயற்பொறியாளர் செல்வராஜ், தமிழ்நாடு அரசுப் போக்குவரத்து கழக கோட்ட மேலாளர் தமிழ்ச்செல்வன் ராயமுண்டான்பட்டி ஊராட்சி தலைவர் திருமதி.கனிமொழி சிவகுமார் மற்றும் ஏராளமான பொதுமக்கள், மாணவ, மாணவியர்கள் கலந்து கொண்டனர்.




தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையில், சென்னை பல்கலைக்கழகத்தில் காவல் துறை சார்பில் நடைபெற்ற “போதைப் பொருட்கள் இல்லாத தமிழ்நாடு” உறுதிமொழி ஏற்கும் நேரடி காணொளி காட்சி அரியலூர் அரசு மருத்துவக்கல்லூரி அனிதா அரங்கத்தில் ஒளிபரப்பு செய்யப்பட்ட நிகழ்ச்சியில் போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சிவசங்கர் கலந்துகொண்டு உறுதிமொழியேற்றார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் பொ.இரத்தினசாமி, அரியலூர் சட்டமன்ற உறுப்பினர் கு.சின்னப்பா, ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க. கண்ணன், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ச.செல்வராஜ் மற்றும் பலர் உள்ளனர்.

### திருச்சி தெற்கு மாவட்டத்தில்

# நாடாளுமன்ற உறுப்பினரின் நன்றி அறிவிப்பு சுற்று பயணம்!

### மாவட்டச் செயலாளர் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அறிவிப்பு!

திருச்சி, ஆக.14-

திருச்சி-தெற்கு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அறிக்கை வருமாறு:-

திருச்சி தெற்கு மாவட்ட தி.மு.க சார்பில், திருச்சி கிழக்கு தொகுதி திருவெறும்பூர் தொகுதிகளில் திருச்சி நாடாளுமன்ற உறுப்பினர் துரை வைகோ ஆகஸ்ட் மாதம் 13,14,16,21 தேதிகளில் பகுதி, ஒன்றிய, நகர, பேரூர் கழகங்களில் பொது மக்களை நேரில் சந்தித்து நன்றி தெரிவிக்கின்றார்.

இந்த நிகழ்வில் மாநில, மாவட்ட, மாநகர நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதி, ஒன்றிய, நகர, பேரூர், வட்ட ,வார்டு, கிளைக் கழகச் செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள்,



அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், மாநகராட்சி, ஒன்றிய நகர, பேரூர் கழக சேர்மன்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், கழகத் தொண்டர்களும் பொதுமக்களும் திரளாக கலந்து கொள்ள வேண்டும் என கேட்டுக் கொள்கின்றேன் .

இவ்வாறு அறிக்கை விடுத்துள்ளார்.

### அருந்ததியினர் பயனடையும் வகையில் தோல் உற்பத்திப் பொருட்களுக்கு

# ஜி.எஸ்.டி. வரி விதிப்பில் சலுகைகள் வழங்க வேண்டும்!

### மாநிலங்களவையில் அந்தியூர் பி.செல்வராசு வலியுறுத்தல்!

புதுடெல்லி, ஆக. 14-

“அருந்ததியின மக்கள் பயனடையும் வகையில் தோல் பொருட்களுக்கு ஜி.எஸ்.டி. வரி விதிப்பில் சலுகைகள் வழங்க வேண்டும்” என்று நாடாளுமன்ற மாநிலங்களவையில் கழக உறுப்பினர் அந்தியூர் பி.செல்வராசு வலியுறுத்தினார்.

இதுகுறித்து மாநிலங்களவையில் அந்தியூர் பி.செல்வராசு பேசியதாவது:-

ஒன்றிய அரசின் இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கை குறித்துப் பேசுவதற்கு வாய்ப்பளித்ததற்கு என் நன்றி. இந்த ஆட்சியின் மீது தொடர்ந்து தி.மு.க. உள்ளிட்ட கட்சிகள் வைக்கும் குற்றச்சாட்டு, செல்வந்தர்களுக்கு உதவும் வகையிலேயே திட்டங்களு க்கான நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறதேயன்றி, ஏழை, எளிய மக்களின் நலன் கருதி எந்தத் திட்டமும் அறிவிக்கப்படுவதில்லை என்பதுதான்.

குறிப்பாக நான் சார்ந்திருக்கும் தமிழ்நாட்டின் மேற்குப் பகுதி குறிப்பாக, கோவை, திருப்பூர், ஈரோடு ஆகிய பகுதிகள் தொழில் வளம் மிகுந்த பகுதிகளாகும்.

தென்னகத்தின் மான்செஸ்டர் என்று என்று அழைக்கப்படும் இப்பகுதியில் நூற்பாலைகள் நிறைய உள்ளன. தற்போது இறக்குமதி செய்யப்படும் பருத்தியில் நிலையற்ற விலையின் ஏற்றம் காரணமாக, நூற்புத் தொழில் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது. அதுபோலவே கைத்தறி நெசவு பெருமளவில் பாதிப்புக்கு ஆளாகி, நூற்றாண்டு காலமாக இத்தொழிலில் ஈடுபட்டு வருபவர்கள் மிகுந்த துன்பத்துக்கு ஆளாகியுள்ளனர். ஏறத்தாழ 240 பஞ்சாலைகள் மூடப்பட்டு, அந்த மக்கள் வேறு பணிக்குச் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இது இத்தொழிலின் நுணுக்கங் களை நன்கு அறிந்த மக்களை பல்லாண்டு காலமாக இத்தொழிலில் சிறந்த பயிற்சி பெற்ற மக்களை பெரும் துன்பத்தில் ஆழ்த்தியுள்ளது.

பாரம்பரியமாக ஒரு தொழிலில் தேர்ச்சி பெற்றவர்களுக்கு எந்தவித உதவியும் செய்யாமல் இந்த நிதிநிலை அறிக்கையில் புதிதாக தொழிற்பயிற்சி அளிப்போம் என்று அறிவித்திருப்பது எந்தவித நன்மையும் செய்யாது என்பதை எடுத்துச் சொல்ல விரும்பு கிறேன்.

**அருந்ததியினர் பாதிப்பு!**

அதுபோலவே, தோல் பதனிடும் தொழிலிலும், தோல் பொருட்கள் செய்யும் பணியிலும் காலங்காலமாகப் பயிற்சி பெற்று அத்தொழிலில் ஈடுபட்டு வந்திருந்த அருந்ததியர் சமூக மக்கள் இன்று ஜி.எஸ்.டி., வரி விதிப்பின் காரணமாக தொழில் பெருமளவில் நசிந்து பெருத்த பாதிப்புக்கு ஆளாகியுள்ளனர்.

இவ்வாறு நூற்றாண்டுகளுக்கு மேல் தேர்ந்த அனுபவப் பயிற்சி பெற்று தொழிலில் ஈடுபட்டு வரும் மக்கள் பெரும்பாலோரின் நிலையைக் கருத்தில் கொண்டு அவர்களுக்கான திட்டங்களை இந்த நிதிநிலை அறிக்கையில் அறிவிக்காதது வருத்தத்திற்குரியதாகும்.

மேலும் எங்கள் பகுதியில் மின்மோட்டார் தயாரிப்புத் தொழில்மிகுந்தபின்னடைவைச் சந்தித்து வருகிறது. காலங்காலமாக மின்மோட்டார் தயாரிப்பில் ஈடுபட்டு வரும் பல நிறுவனங்கள்மூடப்படும்நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன.



இந்த பாதிப்புக்குக் காரணம் பெருந்தொழில் நிறுவனங்களையும் குடிசைத் தொழிலாக வீடுகளிலேயே பல்வேறு பொருட்களை உற்பத்தி செய்யும் தொழிலையும் வேறுபடுத்திப் பார்க்காமல், குடிசைத் தொழிலுக்கும் இதர பெருந்தொழில் நிறு வனங்களுக்கும் ஒரே விதமான ஜி.எஸ்.டி. வரி விதிப்பு குடிசைத் தொழிலில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களுக்கு உரிய சந்தையை உருவாக்காமல் அலட்சியப்படுத்துதல் ஆகியவைதான் என்று நான் குற்றம் சாட்டுகிறேன்.

குறிப்பாக, தமிழகத்தின் மேற்குப் பகுதியில் உள்ள, கோவை, ஈரோடு, திருப்பூர், கரூர், நாமக்கல் ஆகிய மாவட்டங்களில் உள்ள மக்கள் பெரும்பாலோர், சிறு, குறு தொழில்களில் ஈடுபட்டு வருகிறார்கள்.

**கல்வித் தொகை கிடைப்பதில்லை!**

இந்தப் பகுதி மக்கள், பின்னலாடை, நூல் ஆடைகள், மின் மோட்டார் தயாரிப்பு, கோழி வளர்ப்பு, முட்டை, கால்நடை வளர்ப்பு, பால் உற்பத்தி, போர்வை மற்றும் தலையணை தயாரிப்பு, வாகனங்களுக்கு உதிரி பாகங்கள் தயாரிப்பு, லாரி போன்ற வாகனங்களும் உடல் பாகம் கட்டுதல் ஆகிய தொழில்களில் காலங்காலமாக ஈடுபட்டு வருகின்றனர். மேற்படி தொழில்களில் பல லட்சம் மக்கள் ஈடுபட்டு சிறப்பாகச் செய்து வருகிறார்கள்.

இந்தப் பகுதியில் வாழும் தாழ்த்தப்பட்ட மலைவாழ் மக்களுக்கு ஒன்றிய அரசு வழங்கி வரும் கல்வி உதவித் தொகை (Scholarship) முழுமையாகக் கிடைப்பதில்லை.

ஒன்றிய அரசு குடிசைத் தொழிலில் ஈடுபட்டும் பல்வேறு பொருள் உற்பத்தி செய்து வரும் மக்களுக்கு என்ன திட்டத்தை வைத்துள்ளது என்று தெரியவில்லை.

நாட்டின் ஒட்டுமொத்த உற்பத்தியில் குறிப்பிட்ட சதவிகிதத்துக்கு மேல் பங்களிப்பு செய்து வரும் இம்மக்களுக்கு ஒன்றிய அரசு ஜி.எஸ்.டி. வரி விதிப்பில் சலுகைகள் வழங்க வேண்டும். மேலும், அவர்கள் உற்பத்தி செய்து வரும் பொருட்களை சந்தைப்படுத்துவதற்கு கே.வி.ஐ.சி. போன்ற ஒன்றிய அரசு நிறுவனங்களை பயன்படுத்த வேண்டும்.

சுய தொழிலில் ஈடுபடுவோர் இந்த நாட்டின் மொத்த உற்பத்திக்கு மிகப் பெரிய பங்காற்றி வரும் நிலையில் இவர்களுக்குத் தேவையான கடன் உதவிகளை குறைந்த வட்டி விகிதத்தில் வழங்கிடவும் முன்வர வேண்டும்.


இது அனைவருக்குமான நிதிநிலை அறிக்கையாக அமைய வேண்டுமே அன்றி, பணக்காரர்களுக்காக நிதிநிலை அறிக்கையாக இருக்கக் கூடாது என்று உறுதிபடக் கூறுகிறேன்.

இவ்வாறு அந்தியூர் பி.செல்வராசு பேசினார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

# ஏ.கே.ஜெகதீசன்

### ஆகஸ்ட் 14 (2020)



**கழகம் தொடங்கப்பட்ட முதலே உறுப்பினராகிய மூத்த கழக முன்னோடியான இவர், வகுப்புவாரி உரிமை ரத்து செய்யப்பட்டபோது, சமூக நீதியின் போர்க்குரலாக சக மாணவர்களைத் திரட்டிப் போராடியவர்.**

**சேப்பாக்கம் பகுதிச் செயலாளர் – தலைமைச் செயற்குழு உறுப்பினர் என கழகத்தில் பல்வேறு பொறுப்பு வகித்தவர்.**

**பேரறிஞர் அண்ணா தலைமையில், தலைவர் கலைஞர் முன்னிலையில் கலைஞரின் “நச்சுக்கோப்பை” நாடகத்தை நடத்தி அதில் நடித்தவர். மிசா காலத்தில் கலைஞர் அவர்களுக்கு அவருக்கு உறுதுணையாக இருந்தார் என்பதற்காகவே போலீசாரால் கடுமையாகத் தாக்கப்பட்டதோடு, பொய் வழக்கில் கலைஞர் அவர்களுடன் கைது செய்யப்பட்டவர்.**

**1996ல் சென்னை மாநகராட்சி மன்ற உறுப்பினராகவும் – 2001ல் மாநகராட்சியின் எதிர்க்கட்சித் துணைத் தலைவராக செயல்பட்டவர்.**

**2019ல் கழக முப்பெரும் விழாவில், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களால், முத்தமிழறிஞர் கலைஞரின் “நெஞ்சுக்கு நீதி”யில் பாராட்டப்பட்டுள்ள இவருக்கு “கலைஞர் விருது” வழங்கி சிறப்பித்தார்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**